<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 134/2022

இன்று 2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : விஸ்வநாதன்

தந்தை பெயர் : சென்னிமலை கவுண்டர்

வயது : 67

<u>முதல் விசாரணை</u>

8ம் வாதி ஆஜர் . வாதி மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

30,12,2021 – நாச்சிமத்து கவுண்டர் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

09.12.2021– பாப்பம்மாள் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

22.01.1998 – பழனிச்சாமி கவுண்டர் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ 3** ஆகும்.

23.08.2017 – அப்புக்குட்டி இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

14.12.2023– சுப்பாத்தாள் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

14.12.2021 – சென்னிமலை கவுண்டர் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

18.09.2017 – பழனிச்சாமி இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

30.03.2022 – பிரதிவாதி விஸ்வநாதன் கொடுத்த மனுவை நிராகரித்த உத்தரவு அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

தாவா வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள வம்சாவழிப் பட்டியல் **வா.சா.ஆ.9** ஆகும்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.